# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 402 / 2011 / எம்சி. 8 நாள் : 13.01 .2011

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 18.01.2011 செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# மாமன்ற அவசரக் கூட்டம் - ஜனவரி 2011

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | பொதுப்பிரிவு - திருமதி ஆர். அமுதா, 26-வது வார்டு மாமன்ற உறுப்பினர் - ராஜினாமா செய்தது – மாமன்றம் பதிவு செய்தல் - தொடர்பாக |
| 2 | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம் - உப்பிலிபாளையம் கிராமம் - க.ச.எண் 154/9 ஏ – 0.50 ஏக்கர் நிலம் - ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் மாணவ மாணவியருக்கு தங்கும் விடுதி அமைத்தல் - தடையின்மைச் சான்று வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 3 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வருடாந்திர குத்தகை இனங்கள் - பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 4 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வருடாந்திர குத்தகை இனங்கள் - பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 5 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வருடாந்திர குத்தகை இனங்கள் - பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 6 | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வருடாந்திர குத்தகை இனங்கள் - பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வருடாந்திர குத்தகை இனங்கள் - உரிமக்காலம் நீட்டிப்பு செய்தல் - பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - பாப்பநாய்க்கன்பாளையம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண் 1 மற்றும் 2 – உரிமக்காலம் நீட்டிப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 9 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள தங்கும் விடுதி - பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - நேரு விளையாட்டு அரங்கத்திற்கு எதிரில் (மாவட்ட கால்பந்து கழக அலுவலகம் எதிரில்) - இருசக்கர வாகன நிறுத்துமிடம் அமைத்தல் - பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |

நன்றியுரை

அ) **திருக்குறள்**

## எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
## செல்வர்க்கே செல்வம் தகைத்து.

(குறள் 125)

**விளக்கம்**

**பணிவு என்னும் பண்பு, எல்லார்க்கும் நலம் பயக்கும். ஏற்கனவே செல்வர்களாக இருப்பவர்களுக்கு அந்தப் பண்பு மேலும் ஒரு செல்வமாகும்.**

**திருவள்ளுவர்**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

பொருள் - கோயம்புத்தூா் மாநகராட்சி – திருமதி ஆா். அமுதா, 26-வது வாா்டு மாமன்ற உறுப்பினா் - ராஜினாமா கடிதம் கொடுக்கப்பட்டது – ஏற்றல் - மாமன்றம் பதிவு செய்தல் - தொடா்பாக

பாா்வை - 1. வணக்கத்திற்குரிய மேயா் அவா்களிடம் நேரடியாக வழங்கப்பட்ட திருமதி ஆா். அமுதா, 26-வது வாா்டு மாமன்ற உறுப்பினா் அவா்களின் ராஜினாமா கடிதம் நாள் 27.12.2010

2. கோயம்புத்தூா் மாநகராட்சி சட்டம் 1981' பிரிவு (37)

--------------

கோயம்புத்தூா் மாநகராட்சி 26-வது வாா்டு மாமன்ற உறுப்பினா் திருமதி ஆா். அமுதா அவா்கள், தனக்கு தனியாா் கல்லூரியில் பணி நியமன உத்திரவு கிடைக்கப்பெற்றுள்ளதால், மாமன்ற உறுப்பினா் பதவியை ராஜினாமா செய்வதாக பாா்வை 1-ல் காணும் 27.12.2010 ம் தேதியிட்ட கடிதத்தின்படி தெரிவித்துள்ளாா்கள். இவா் நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவில் உறுப்பினராகவும் இருந்து வந்தாா்.

பாா்வை 2-ல் காணும் கோயம்புத்தூா் மாநகராட்சி சட்டம் 1981' பிரிவு (37)ல், மாமன்ற உறுப்பினரால் வழங்கப்படும் எழுத்துப்பூா்வமான ராஜினாமா அறிவிப்பு, வணக்கத்திற்குரிய மேயா் அவா்களால் பெறப்பட்ட நாளிலிருந்து மாமன்ற உறுப்பினா் பதவி விலகியதாக கருதப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாமன்ற உறுப்பினரின் ராஜினாமா கடிதம் வணக்கத்திற்குரிய மேயா் அவா்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. திருமதி ஆா். அமுதா, 26-வது வாா்டு மாமன்ற உறுப்பினா், பதவியை ராஜினாமா செய்த விபரம் மாமன்றத்தின் தகவலுக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் பதிவு செய்யலாம். ந.க.எண். 13265/2010/எம்.சி. 8

<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 215 நாள் 18.01.2011</u>

பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள் : ஆதிதிராவிடா் நலம் - கோயம்புத்தூா் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட கோவை தெற்கு வட்டம் உப்பிலிபாளையம் கிராமம் - க.ச. 154 / 9 ஏ பகுதியில் காலியாக உள்ள 0.50 ஏக்கா் இடத்தில் ஆதிதிராவிடா் நலத்துறையின் மூலம் மாணவ மாணவியா்களுக்கு தங்கும் விடுதி அமைக்க அனுமதி வழங்க கோரியுள்ளது – குறித்து.

பாா்வை : மாவட்ட ஆட்சித் தலைவா் - கோயம்புத்தூா் அவா்கள் கடிதம் நே.மு.க. ந.க. எண். 5762 /2010 /கா 8. நாள். 6.12.2010.

------------

பாா்வையில் காணும் கோயம்புத்தூா் மாவட்ட ஆட்சியாளா் அவா்களது கடிதத்தில், கோயம்புத்தூா் மாநகராட்சி சாா்ந்த கோவை (தெ) வட்டம் உப்பிலிபாளையம் கிராமம், க.ச 154 / 9 ஏ பூமியில் 0.50 ஏக்கா் இடத்தில் ஆதிதிராவிடா் நலத்துறையின் மூலம் மாணவ / மாணவியா்களுக்கு தங்கும் விடுதி கட்ட உத்தேசித்து மாமன்ற முன் மொழிவினை வழங்க கோரப்பட்டுள்ளது.

மேற்காண் உப்பிலிபாளையம் கிராமம் க.ச. எண் 154 / 9 ஏ பூமியில் உள்ள 0.50 ஏக்கா் நிலம், தற்போது இப்பகுதியில் வசிக்கும் மக்களால் வாலிபால் மற்றும் பிற விளையாட்டுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மனையின் வடமேற்கு மூலையில் கான்கீாிட்டில் போடப்பட்ட "பத்ரகாளியம்மன் கோவில் சாமி மேடை " உள்ளது. மேற்கு பகுதியில் சிதிலமடைந்த ஆரம்பப்பள்ளி கட்டிடம் மற்றும் அதனுடன் அமைந்த சத்துணவுக்கூடமும் அமைந்துள்ளது. தற்போது இக்கட்டிடம் பயன்பாட்டில் இல்லை.

மேற்படி பள்ளியில் செயல்பட்டு வந்த கட்டிடம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. பிரதான மனையிடத்தின் தெற்கு பகுதியில் சௌாிபாளையம் - உப்பிலிபாளையம் சாலையும், வடக்கு பகுதியில் உள்ளாட்சி சாலையும், கிழக்கு பகுதியில் பூங்கா சாலையும் எல்லைகளாக அமைந்துள்ளது. மேற்படி இடத்திற்கு மூன்று பக்கங்களிலும் வழி அமைக்க வாய்ப்புள்ளது. பிரஸ்தாப காலை கிராம ஆவணங்களின்படி "அரசு புறம்போக்கு காலியிடம் " என வகைபாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த உப்பிலிபாளையம் கிராமம் க.ச. எண் 154 / 9 ஏ –ல் காலியிடமாக உள்ள 0.50 ஏக்கா் அரசு புறம்போக்கு நிலத்தினை ஆதிதிராவிடா் நலத்துறையின் மூலம் மாணவ, மாணவியா்களுக்கு தங்கும் விடுதி கட்ட அனுமதி வழங்குவது தொடா்பான மாநகராட்சியின் தடையின்மைச் சான்று வழங்குதல் பற்றிய பொருள் குறித்த வரைவு ஒப்புதலுக்காக சமா்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 13288 / 2010 / எம் எச் 5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 216 நாள் 18.01.2011</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் அப்பகுதியில் உள்ள பல்வேறு சமுதாய மக்களால் நீண்ட நாட்களாக உபயோகப்படுத்தப்பட்டு வருவதனால் குழு அமைத்து நேரடியாக இடத்தை ஆய்வு செய்து, அப்பகுதி மக்களின் தேவையறிந்து மீண்டும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

இக்குழுவில் உறுப்பினர்களாக வணக்கத்திற்குரிய மேயர், ஆணையர், துணை மேயர், ஆளும்கட்சித் தலைவர், எதிர்கட்சித் தலைவர், கிழக்கு மண்டலத் தலைவர், 11-வது வார்டு மாமன்ற உறுப்பினர், நகரமைப்பு அலுவலர், செயற் பொறியர் (கிழக்கு), உதவி ஆணையர் (கிழக்கு) ஆகியோரை நியமனம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

---

பொருள் எண் 3

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனங்கள் 2010 – 2013 ம் ஆண்டுக்கு குத்தகை விடப்பட்டுள்ளது. இதில் குத்தகை ஏல நிபந்தனையின்படி குத்தகைதாரர்கள் 2010-2011-ம் ஆண்டுக்கு உண்டான ஏலத் தொகை செலுத்தி குத்தகைகள் நடத்தி வருகின்றனர்.

தற்போது குத்தகை நடத்தி வரும் குத்தகைதாரர்கள் 2011-2012-ம் ஆண்டுக்கு குத்தகையை ஏல நிபந்தனையின்படி 2010-2011 ஆண்டு குத்தகை தொகையில் இருந்து 5% உயர்வு செய்யப்பட்ட தொகை செலுத்தி நடத்திட சம்மதக் கடிதம் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. இதில் கீழ்கண்ட பட்டியலில் கண்ட குத்தகைதாரர்கள் பல்வேறு காரணங்களுக்காக தங்களால் குத்தகையை தொடர்ந்து நடத்த விருப்பம் இல்லையெனவும், எனவே தங்களது குத்தகை இனத்தினை மாநகராட்சி வசம் ஒப்படை செய்ய விருப்பம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளனர்.

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் | 2010–2013ம் ஆண்டுக்கு குத்தகை எடுத்துள்ள தொகை (ஆண்டுக்கு) ரூ. |
|---|---|---|---|
| 1. | வ.உ.சி. பூங்கா சிறுவர் ரயில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு. கே.ரமேஷ் | 5,63,400/- |
| 2. | போத்தனூர் ரோடு லாரிப்பேட்டையில் லாரிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு. அப்துல் சுக்கூர் | 9,61,000/- |
| 3. | தியாகி குமரன் மார்க்கெட் உட்புறத்தில் உள்ள இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு. என். ரகோத்தமன் | 21,06,999/- |
| 4. | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் தரைதள கேரேஜ் பகுதி மற்றும் 5-வது தளப்பகுதியில் சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | திரு. கே. ராஜு | 22,66,300/- |
| 5. | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் பேருந்து நுழைவு கட்டணம். | திரு. கே. நடராஜன் | 20,72,000/- |
| 6. | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் உட்புறம் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் | திரு. C.R. வினாயகம் | 10,31,000/- |

மேற்காண் பட்டியலில் குறிப்பிட்டுள்ள 6 குத்தகை இன உரிமதாரர்களை தவிர மீதம் உள்ள குத்தகைதாரர்கள் தொடர்ந்து குத்தகை இனங்களை ஏல நிபந்தனையின்படி 5% உயர்வு செய்த தொகையை செலுத்தி 2011 – 2012-ம் ஆண்டுக்கு நடத்திட சம்மதக் கடிதம் அளித்துள்ளனர்.

எனவே மேற்படி விருப்பமின்மை காரணமாக குத்தகைதாரர்கள் திரும்ப மாநகராட்சி வசம் ஒப்படை செய்ய கடிதம் அளித்துள்ள 6 குத்தகை இனங்களுக்கு 2011-14-ம் ஆண்டுக்கு குத்தகை ஏல நிபந்தனைகளின்படி பொதுமின்ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் ஒப்புதல் பெற்று மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண். 9659 / 2009 / அ1

## மாநகர மன்ற தீர்மானம் எண் 217 நாள் 18.01.2011

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனங்கள் 2010 – 2013 ம் ஆண்டுக்கு குத்தகை விடப்பட்டுள்ளது. இதில் குத்தகை ஏல நிபந்தனையின்படி குத்தகை தாரர்கள் 2010-2011-ம் ஆண்டுக்கு உண்டான ஏலத் தொகை செலுத்தி குத்தகைகள் நடத்தி வருகின்றனர்.

தற்போது குத்தகை நடத்தி வரும் குத்தகைதாரர்கள் 2011-2012-ம் ஆண்டுக்கு குத்தகையை ஏல நிபந்தனையின்படி 2010-2011 ஆண்டு குத்தகை தொகையில் இருந்து 5% உயர்வு செய்யப்பட்ட தொகை செலுத்தி நடத்திட சம்மதக் கடிதம் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. இதில் கீழ்கண்ட பட்டியலில் கண்ட குத்தகைதாரர் பல்வேறு காரணங்களுக்காக தன்னால் குத்தகையை தொடர்ந்து நடத்த விருப்பம் இல்லையெனவும், எனவே தனது குத்தகை இனத்தினை மாநகராட்சி வசம் ஒப்படை செய்ய விருப்பம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளனர்.

| வ. எண் | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் | 2010–2013ம் ஆண்டுக்கு குத்தகை எடுத்துள்ள தொகை (ஆண்டுக்கு) ரூ |
|---|---|---|---|
| 1. | குரு ஹோட்டல் அருகில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | திரு. சக்திவேல் | 15,00,000/- |

எனவே மேற்படி விருப்பமின்மை காரணமாக குத்தகைதாரர் திரும்ப மாநகராட்சி வசம் ஒப்படை செய்ய கடிதம் அளித்துள்ள இனத்தினை 2011-2013-ம் ஆண்டுக்கு குத்தகை ஏல நிபந்தனைகளின்படி பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண். 9659 / 2009 / அ1

## மாநகர மன்ற தீர்மானம் எண் 218 நாள் 18.01.2011

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் 2011 -12 ஆண்டிற்கு சம்மதம் கடிதம் சமர்ப்பித்தவர்களுக்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் மற்றும் சம்மதம் பெறப்படாத இனங்களுக்கு மறு ஏலம் கோர அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை:- அரசாணை எண். 78, நாள். 25.05.2009

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனங்கள் பார்வையில் கண்ட அரசாணையின்படி 2010-11 ஆண்டின் உரிமத் தொகையில் 5% உயர்வு செய்து 2011-12 ஆண்டிற்கு ஏலத் தொகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். கீழ்க்கண்ட குத்தகைதாரர்கள் 2011-12 ஆண்டிற்கு குத்தகை தொகை உயர்வு செய்வதற்கு சம்மதம் கடிதம் கொடுத்துள்ளனர்.

| வ.எண். | குத்தகை இனங்கள் | குத்தகைதாரர் பெயர் | குத்தகை காலம் | 2010-11ம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ. | 5% உயர்விற்கு பின் 2011-12ம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் ரோடு M.G.R. மொத்த காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | G.இருதயராஜா | 01.04.10 முதல் 31.3.2013 | 1,08,01,000 | 1,13,41,050 |
| 2 | மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி காய்கறி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | J.ஸ்டீபன் | 01.04.10 முதல் 31.3.2013 | 50,40,008 | 52,92,008 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | A.M.நாசர் அலி | 01.04.10 முதல் 31.3.2013 | 33,00,333 | 34,65,350 |
| 4 | காந்திபார்க் நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | C.செல்வம் | 01.4.10 முதல் 31.3.2013 | 2,92,000 | 3,06,600 |

| வ.எண். | குத்தகை இனங்கள் | குத்தகைதாரர் பெயர் | குத்தகை காலம் | 2010-11ம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 5 | தடாகம் ரோடு வாழைக்காய் மண்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | S.சசிகுமார் | 01.4.10 முதல் 31.3.2013 | 5,45,004 |
| 6 | மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்க்கெட் கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | S.போஸ் | 01.4.10 முதல் 31.3.2013 | 4,27,000 |
| 7 | மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட் கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | K.A.அபுதாஹீர் | 01.4.10 முதல் 31.3.2013 | 4,50,999 |
| 8 | தடாகம் ரோடு நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | S.போஸ் | 01.4.10 முதல் 31.3.2013 | 6,77,777 |
| 9 | திவான்பகதூர் ரோடு வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | S.அனந்த ராமகிருஷ்ணன் | 01.4.10 முதல் 31.3.2013 | 28,00,800 |
| 10 | பன்னீர் செல்வம் பூமார்க்கெட் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கம் உரிமம் | A.M.நாசர் அலி | 01.4.10 முதல் 31.3.2013 | 12,00,033 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண்கள். 1 முதல் 4 வரை உள்ள இனங்கள் 2011-12 ம் ஆண்டிற்கு, 2010-11ம் ஆண்டின் ஏலத்தொகையில் 5% உயர்வு செய்து நடத்த சம்மதக் கடிதம் சமர்ப்பித்ததால் இவ்வினங்களுக்கு அனுமதி நீட்டிப்பு செய்து உரிமம் வழங்கவும், வரிசை எண். 5 முதல் 10 வரை உள்ள இனங்கள் தொடர்ந்து நடத்த சம்மதம் தெரிவிக்காததால் இவ்வினங்களை பொது மின்ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், செய்தித்தாளில் அறிவிப்பு செய்வதற்கும் அவசர அவசியத்தை முன்னிட்டு வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன்னேற்புடன் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 104/2011/ அ1(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 219 நாள் 18.01.2011**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்கு உட்பட்ட வருடாந்திர குத்தகை இனங்கள் 2011-12ம் ஆண்டிற்கு உரிமம் புதுப்பிக்க கீழ்கண்ட இனங்களுக்கு உரிமதாரா்களிடமிருந்து ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் 2010-11ம் ஆண்டின் குத்தகைத் தொகையில் 5% உயா்வு செய்து செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளாா்கள்.

| வ.எண் | இனம் பெயர் | உரிமதாரா்பெயா் | 2010-11ம் ஆண்டு ஏலத்தொகை | 2011-12ம் ஆண்டிற்கு 5% உயா்வு செய்து செதுத்தவேண்டிய தொகை |
|---|---|---|---|---|
| 1 | சத்திரோடு, நவீன பொதுக் கட்டணம் கழிப்பிடம் | சு.மாதவன் | ரூ.4,82,000/- | ரூ.5,06,100/- |
| 2 | சத்திரோடு, ஆடு, மாடு அறுவை மனை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ஏ. அபுதாகீா | ரூ.3,14,000/- | ரூ.3,29,700/- |
| 3 | சத்திரோடு, புல்மாா்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | என். ஜோதிமணி | ரூ.1,74,000/- | ரூ.1,82,700/- |

கீழ்கண்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு 2011-12ம் ஆண்டிற்கு உரிமம் புதுப்பிக்க விருப்பம் இல்லாத உரிமதாரா்களிடமிருந்து ஒப்புதல் கடிதம் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | இனம் பெயர் | உரிமதாரா்பெயா் | 2010-11ம் ஆண்டு ஏலத்தொகை |
|---|---|---|---|
| 1 | சத்திரோடு, ஆம்னி பேருந்து நுழைவு வாயில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | பி. கமலாவதி | ரூ.13,30,000/- |
| 2 | காந்திபுரம், சீனிவாசபுரம் இரண்டு சக்கர வாகனம் மற்றும் 4 சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | கே. ராஜீ | ரூ33,52,000/- |
| 3 | காந்திபுரம், சீனிவாசபுரம் நவீன பொதுக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமை | எம்.அன்புராஜ், | ரூ.4,51,700/- |
| 4 | சிவானந்தா காலனி பேருந்து நிலையம் அருகில் நவீன பொதுக் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | சி.ஆர். விநாயகம் | ரூ.1,10,000/- |

பிரதான அலுவலக ந.க.எண் 4642/2010/எம்.ஏ.1, நாள் 21.12.2010-ன்படி 2011ம் ஆண்டு பிப்ரவரி, மாா்ச் மாதங்களில் தமிழக சட்டமன்றத் தோ்தல் அறிவிப்பு வெளியிடப்படும் சாத்தியக்கூறுகள் உள்ளன. அக்கால கட்டத்தில் தோ்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் என்பதனால் ஏலம் நடத்த இயலாது. எனவே தற்போது ஏலம் நடத்தி வரும் உரிமதாரா்களிடமிருந்து 2011-12-ம் ஆண்டிற்கு மேலே குறிப்பிட்ட புதுப்பிக்க விருப்பம் இல்லாத உரிமதாரா்களிடமிருந்து 31.03.2011 அன்று ஒப்படைக்கப்படவுள்ள நான்கு இனங்களையும் பொது மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய அவசர அவசியத்தை முன்னிட்டு வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவாின் ஒப்புதல் பெற்று மாமன்றத்தின் அனுமதி எதிா்நோக்கி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.12974/2009/(அ7)(வ)

## மாநகர மன்ற தீா்மானம் எண் 220 நாள் 18.01.2011

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

பொருள் : கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் 2011-12-ம் ஆண்டிற்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பிக்க வேண்டியது - சம்பந்தமாக

------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனங்கள் 2010-11-ம் ஆண்டின் உரிமத் தொகை 5% உயர்வு செய்து 2011-12-ம் ஆண்டிற்கு ஏலத் தொகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். கீழ்க்கண்ட குத்தகைதாரர்கள் ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் 2011-12-ம் ஆண்டிற்கு 2010-11-ம் ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளனர்.

| வ. எண். | குத்தகை இனங்கள் | குத்தகைதாரர் பெயர் | வருடம் | 2010-11 ஏலத் தொகை | 2011-12 ஏலத் தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | முந்தைய ஏலத்தொகை ரூ. | 5% உயர்வு செய்யப்பட்ட ஏலத்தொகை ரூ. | முந்தைய ஏலத் தொகை +5% உயர்வு செய்யப்பட்ட தொகை ரூ. |
| 01. | சிங்காநல்லூர் தினசரி மார்க்கெட் | திரு குமரேசன் | 1.4.10 முதல் 31.3.13 | 4,75,500 | 23,775 | 4,99,275 |
| 02. | சிங்காநல்லூர் ஆடு அறுவை மனை | திரு ஏ.சந்திரன் | 1.4.10 முதல் 31.3.13 | 1,47,000 | 7,350 | 1,54,350 |
| 03. | உப்பிலிபாளையம் ஆடு அறுவைமனை | திரு கே.பி.பால்ராஜ் | 1.4.10 முதல் 31.3.13 | 1,46,000 | 7,300 | 1,53,300 |
| 04. | சௌரிபாளையம் ஆடு அறுவைமனை | திரு ஏ.சந்திரன் | 1.4.10 முதல் 31.3.13 | 1,66,000 | 8,300 | 1,74,300 |
| 05. | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடம் | திரு டி.ரங்கராஜ் | 1.4.10 முதல் 31.3.13 | 13,77,777 | 68,888 | 14,46,665 |
| 06. | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் | திரு வி.கே.ரஹமத் துல்லா | 1.4.10 முதல் 31.3.13 | 7,75,777 | 38,789 | 8,14,566 |
| 07. | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் மூன்று எண்ணிக்கை எடை காட்டும் இயந்திரம் | திரு வி.மணிவண்ணன் | 1.4.10 முதல் 31.3.13 | மூன்று வருடத்திற்கான செலுத்தப்பட்ட தொகை 1,36,080 (ஒரு வருடத்திற்கு) 45,360 | 2,268 | 2,268 5% உயர்வு செய்த தொகை |
| 08. | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் தொலைகாட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்யும் உரிமம் | திரு சி.என். மதிவாணன் | 1.4.10 முதல் 31.3.13 | மூன்று வருடத்திற்கான செலுத்தப்பட்ட தொகை 3,62,400 (ஒரு வருடத்திற்கு) 1,20,800 | 6,040 | 6,040 5% உயர்வு செய்த தொகை |

மேலே குறிப்பிட்டுள்ள 8 இனங்களுக்கு 5% உயர்வு செய்து சம்மதம் தெரிவித்து சம்மதக் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. வரிசை எண்.7-ன் உரிமத் தொகையை மூன்று ஆண்டுகளுக்கு சேர்த்து ரூ.1,36,080/- செலுத்தப்பட்டுள்ளது. ( மாமன்றத் தீர்மான எண். 285 நாள் 31.03.2010) ஒரு வருட ஏலத் தொகை 45,360/- ஆகும். அதில் 5% சதவிகிதம் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.2268/- ஆகும். மற்றும் வரிசை எண். 8ல் உரிமத் தொகையை மூன்று ஆண்டுகளுக்கு சேர்த்து ரூ.3,62,400/- செலுத்தப்பட்டுள்ளது. ( மாமன்றத் தீர்மான எண். 285 நாள் 31.03.2010) ஒரு வருட ஏலத் தொகை 1,20,800/- ஆகும். அதில் 5% சதவிகிதம் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ.6040/- ஆகும்.

கீழே குறிப்பிட்டுள்ள வரிசை எண். 1 முதல் 5 வரை உள்ள இனங்களின் உரிமைதாரர்கள் 5% தொகை செலுத்தி உரிமம் நீட்டிப்பு செய்ய விருப்பம் இல்லை என கடிதம் கொடுத்துள்ளனர்.

| வ.எண். | குத்தகை இனங்கள் | குத்தகைதாரர் பெயர் | வருடம் | 2010-11 ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 01. | இராமநாதபுரம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் | திரு எம். முத்து கிருஷ்ணன் | 1.4.10 முதல் 31.3.13 | 2,94,100 |
| 02. | புலியகுளம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் | திரு ஹரிகிருஷ்ணன் | 1.4.10 முதல் 31.3.13 | 2,40,000 |
| 03. | பி.என்.பாளையம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் | திரு ஹரிகிருஷ்ணன் | 15.6.10 முதல் 31.3.13 | 2,08,500 |
| 04. | ரேஸ்கோர்ஸ் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் | திரு அன்வர் | 1.4.10 முதல் 31.3.13 | 54,900 |
| 05. | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் | திரு வி.மணிவண்ணன் | 1.4.10 முதல் 31.3.13 | 13,77,999 |
| 06. | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் பொருட்கள் பாதுகாப்பு அறை | திரு எம்.ரகுராம் | 1.4.08 முதல் 31.3.2011 | 27,072 |
| 07. | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் உணவகம் நடத்தும் உரிமம் | திரு எம்.ரகுராம் | 1.4.08 முதல் 31.3.2011 | 1,35,000 |
| 08. | சிங்காநல்லூர் மாநகராட்சி படகு துறை | திரு எம்.ரகுராம் | 1.4.08 முதல் 31.3.2011 | 4,50,000 |

மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள வரிசை எண். 6, 7 ஆகிய இனங்களின் உரிமக் காலம் 01.04.2008 முதல் 31.03.2011 முடிய உரிமக் காலம் முடிவடைய உள்ளது. எனவே ஏலம் விடுவதற்கும் மற்றும் வரிசை எண்.8-ல் சிங்காநல்லூர் மாநகராட்சி படகு துறையானது படர் ஆகாயத் தாமரைகள் குளம் முழுவதும் படர்ந்துள்ளது. ஏலதாரர் திரு எம்.ரகுராம் படர் ஆகாயத் தாமரைகள் அகற்றிக் கொடுத்தால் தான் படகு சவாரி நடத்த இயலும் என தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார். மேலும் மாநகராட்சியால் படர் ஆகாயத் தாமரை அகற்றாததால் ஏலதாரர் நடத்த இயலாது என தெரிவித்து அதற்கு செலுத்திய வைப்புத் தொகையை திரும்ப வழங்க கோரியுள்ளார். (ந.க.எண்.10852/2009/அ11)

எனவே, சிங்காநல்லூர் படகு துறையை வருடாந்திர குத்தகை இனங்களிலிருந்து நீக்கம் செய்யவும் அவசர, அவசியம் கருதி மேற்குறிப்பிட்ட குத்தகை இனங்களை விரைவில் ஏலம் கோர வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு பொருள் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.15525/ 2009/ கிஅ11

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 221 நாள் 18.01.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

பொருள் : வணிக வளாக கடைகள் - கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 1 மற்றும் 2-ன் உரிம காலம் 31.01.2011-உடன் முடிவடைய உள்ளது. உரிமக் கட்டணம் உயர்வு செய்து உரிமக் காலம் நீட்டிப்பு செய்வது - சம்பந்தமாக

------

கோயமுத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 1-ன் உரிமையாளர் திரு எஸ்.எஸ்.ரவிகுமார் மற்றும் கடை எண்.2-ன் உரிமையாளர் திரு பி.கார்த்திகேயன் ஆகியோருக்கு மாதாந்திர உரிமக் கட்டணம் கடை எண். 1-க்கு ரூ.1,875/- கடை எண். 2-க்கு ரூ.1,900/- என்ற அடிப்படையில் 01.02.2008 முதல் 31.01.2011 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு மாமன்ற தீர்மான எண். 212 நாள் 21.01.2008 மூலம் நீட்டிப்பு செய்யப்பட்ட உரிமக் காலம் 31.01.2011 உடன் முடிவடைய உள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல், குத்தகை புதுப்பித்தல் குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசாணை (நிலை) எண். 92 நாள் 03.07.2007-ல் திருத்திய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி வணிக வளாக கடை எண்.1-ன் உரிமையாளர் திரு எஸ்.எஸ்.ரவிகுமார் மற்றும் கடை எண்.2-ன் உரிமையாளர் திரு பி.கார்த்திகேயன் ஆகியோருக்கு உரிம நீட்டிப்பு தொகை அரசாணையின்படி கடை எண். 1 மற்றும் 2-க்கு ரூ.2000 /- செலுத்தியுள்ளார்கள். ( கடை எண். 1-க்கு (இரசீது எண்.12462 நாள் 10.01.2011 கடை எண்.2-க்கு இரசீது எண்.12463 நாள் 10.01.2011)

மாதாந்திர உரிமக் கட்டணத் தொகையில் குறைந்தபட்சமாக 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டால், மாதாந்திர உரிமக் கட்டணம் கடை எண். 1-க்கு ரூ.2,157 /- எனவும் கடை எண். 2-க்கு ரூ.2,185 /- எனவும் வருகிறது. எனவே, அரசாணையின்படி, பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி வணிக வளாக கடைகளுக்கு மாதாந்திர உரிமக் கட்டணம் கடை எண். 1-க்கு ரூ.2,157/- எனவும் கடை எண். 2-க்கு ரூ.2,185 /- என நிர்ணயம் செய்து 01.02.2011 முதல் 31.01.2014 முடிய மூன்றாண்டுகளுக்கு நீட்டிப்பு செய்ய அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முன் அனுமதி பெறப்பட்டு மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண்.00173/ 2011/ கிஅ11

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 222 நாள் 18.01.2011</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள தங்கும் விடுதியில் 2006-2007 முதல் 2008-09 வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஆர். ராகவலிங்கம் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேற்படி தங்கும் விடுதியில் சட்டத்திற்கு புறம்பான செயல்கள் நடைபெறுவதை கண்டறிந்து 28.12.2008ம் தேதியில் தங்கும் விடுதியினை பூட்டி சீல் வைத்து மாமன்ற அனுமதி பெற்று உரிமம் ரத்து செய்யப்பட்டது. மேற்படி தங்கும் விடுதி மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள பிளாட்பாரங்களில் அமைந்துள்ளது. அதில் உள்ள அறைகளின் அளவுகள் கீழ்கண்டவாறு

<u>பிளாட்பாரம் எண் : 1</u>
**1. 23 X 12 - 360 சதுரஅடி ( 4 அறைகள் )**
**2. 15 X 9.5 = 108 சதுரஅடி ( 16 அறைகள் )**

<u>பிளாட்பார்ம் எண் : 2</u>
**1. 30 X 15 - 470 சதுரஅடி**
**2. 11 X 9.8 - 108 சதுரஅடி ( 14 அறைகள் )**

<u>பிளாட்பார்ம் எண் : 3</u>
**1. 30 X 15 - 470 சதுரஅடி**
**2. 11 X 9.8 - 108 சதுரஅடி ( 14 அறைகள் )**

<u>பிளாட்பார்ம் எண் : 4</u>
**1. 30 X 15 - 470 சதுரஅடி**

மேற்படி அளவு கொண்ட அறைகளை அலுவலகம், வணிக உபயோக கடைகள், தனியார் கணினி அலுவலகங்களில் ஆகியவற்றிற்கு பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் மாதாந்திர வாடகை அடிப்படையில் ஒப்படை செய்யலாம். மேலும் அரசு சார்ந்த நிறுவனங்கள் மேற்படி இடத்தினை மாதாந்திர வாடகை அடிப்படையில் கோரும் பட்சத்தில் பொதுப்பணித்துறை மாதாந்திர வாடகை மதிப்பு அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து ஒப்படை செய்யலாம்.

மேற்கூறிய அளவுகள் கொண்ட அறைகளுக்கு கீழ்கண்டவாறு ஏல வைப்புத் தொகைகளை நிர்ணயம் செய்யலாம்.

| வ. எண் | இனம் | அறை ஒன்றிற்கு | | | |
|---|---|---|---|---|---|
| | | வைப்புத் தொகை (ரூ) | வாடகை முன் பணம் (ரூ) | சால் வென்சி தொகை (ரூ) | சால்வென்சி இல்லாதால் செலுத்த வேண்டிய தொகை (ரூ) |
| 1. | தளம் 1<br>360 சதுர அடி<br>4 அறைகள் | 5,00,000/- | 2,00,000/- | 5,00,000/- | 2,00,000/- |
| 2. | தளம் -1<br>147 சதுர அடி<br>( 16 அறைகள் ) | 2,00,000/- | 1,00,000/- | 3,00,000/- | 1,00,000/- |
| 3. | தளம் - 2<br>470 சதுர அடி<br>( 1 அறை) | 5,00,000/- | 1,00,000/- | 5,00,000/- | 2,00,000/- |
| 4. | தளம் - 2<br>108 ச.அடி.<br>(14 அறைகள்) | 2,00,000/- | 1,00,000/- | 3,00,000/- | 1,00,000/- |
| 5. | தளம் - 3<br>470 ச.அடி (1 அறை ) | 5,00,000/- | 2,00,000/- | 5,00,000/- | 2,00,000/- |
| 6. | தளம் - 3<br>108 ச.அடி<br>( 14 அறைகள் ) | 2,00,000/- | 1,00,000/- | 3,00,000/- | 1,00,000/- |
| 7. | தளம் - 4<br>470 ச.அடி ( 1 அறை ) | 5,00,000/- | 2,00,000/- | 5,00,000/- | 2,00,000/- |

மேற்படி ஏலத்தொகைகளை நிர்ணயம் செய்து கடைகளை பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர அவசரம் அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின் ஒப்புதல் பெற்று மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 11488 / 2009 / அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 223 நாள் 18.01.2011</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வ.உ.சி. பூங்கா மற்றும் நேரு விளையாட்டு அரங்கத்திற்கு ஏராளமான பொது மக்கள் தினந்தோறும் வருகின்றனர். மேலும் இவர்களது இரு சக்கர வாகனத்தை பாதுகாப்பாக நிறுத்திட இடம் இங்கு இல்லாததால் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இவர்களது வாகனங்களை நிறுத்தி விட்டு செல்கின்றனர்.

இந்நிலையில் நேரு ஸ்டேடியம் நுழைவாயில் எதிரில் ( மாவட்ட கால்பந்து கழக அலுவலகம் எதிரில்) மாநகராட்சிக்கு சொந்தமான 280 அடி நீளம் 50 அடி அகலம் கொண்ட இடம் வேலியிடப்பட்டு எவ்வித உபயோகமின்றி உள்ளது. மேற்படி இடத்தில் மாநகராட்சி இரு சக்கர வாகன நிறுத்துமிடம் அமைப்பதால் இங்கு வரும் பொதுமக்கள் தங்களது இரு சக்கர வாகனங்களை நிறுத்துவதற்கு வசதியாக இருக்கும். மேலும் இதனால் மாநகராட்சிக்கு வருவாய் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

எனவே மேற்படி இடத்தில் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் அமைத்து பொது மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்பந்ததாரருக்கு ஒப்படை செய்யவும் மாநகராட்சிக்கு சொந்தமான பிற இரு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் வசூலிக்கப்படும் நிறுத்த கட்டணத்தை இங்கு நிர்ணயம் செய்யவும் அவசரம் அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின் ஒப்புதல் பெற்று மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண். 9659 / 2009 / அ1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 224 நாள் 18.01.2011</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி